**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.271** **நாள்: 16.09.2025**

**மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள், வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வார்டு-74க்குட்பட்ட புதிய வாழைமா நகர் மற்றும் செல்வபெருமாள் கோயில் தெருவில் நடைபெற்று வரும் குடிநீர் மற்றும் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள் குறித்து இன்று (16.09.2025) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

பெருநகர சென்னை மாநகராட்சி, திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு-74க்குட்பட்ட பகுதிகளில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள், குடிநீர் திட்டப் பணிகள், சாலை வெட்டுக்கள் சீரமைப்புப் பணிகள் உள்ளிட்ட பல்வேறு திட்டப்பணிகள் நடைபெற்று வருகிறது.

மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள், வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வார்டு-74க்குட்பட்ட புதிய வாழைமா நகர் பகுதியில் உள்ள 1 முதல் 9 வரையிலான தெருக்களில் நடைபெற்று வரும் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள், குடிநீர் திட்டப் பணிகள், சாலை வெட்டுக்கள் சீரமைப்புப் பணிகள் ஆகியவற்றினையும், செல்வபெருமாள் கோயில் தெருவில் நடைபெற்று வரும் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள், சாலை வெட்டுக்கள் சீரமைப்புப் பணிகள் தொடர்பாகவும் இன்று (16.09.2025) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, மக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறின்றி பணிகளை மேற்கொண்டு விரைந்து முடித்திடவும், பணிகள் முடிந்தவுடன் உடனடியாக சாலை சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ளவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

மேலும், அங்குள்ள பொதுமக்களிடம் கலந்துரையாடி குறைகள் குறித்து கேட்டறிந்து, உடனடியாக அவற்றை சரிசெய்திட சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுகளின்போது, மண்டல அலுவலர் திரு. சொக்கலிங்கம், சென்னை குடிநீர் வாரிய தலைமைப் பொறியாளர் திரு. ராதாகிருஷ்ணன் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**